# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 11/2025

## Deposition of P.W. 1

**Name** : **Thiru. Alwin**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **2.03.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது அழகியபாண்டியபுரம் வனச்சரகம், தடிக்காரகோணம் பிரிவு வனச்சோதனை சாவடி வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது பூதப்பாண்டி வனச்சரக ஆரல்வாய்மொழி வடக்கு பீட் வனக்காப்பாளராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கு ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 5 வது எதிரி இசக்கிமுத்து என்பவரை தெரியும். 4.9.2021 அன்று இரவு 10.15 மணியளவில் நான் ஆரல்வாய்மொழி வடக்கு பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்த காலத்தில் வனவர் திரு.ரமேஷ்

அவர்கள் செல்போனில் தொடர்பு கொண்டு இன்று இரவு ரோந்து செல்லவேண்டும் எனவே அலுவலகம் வரும்படி கூறினார். அதன்பேரில் நான் 10.30 மணியளவில் வனச்சரக அலுவலகம் சென்றபோது அங்கு தெற்கு மலை மேற்கு பீட் வனக்காப்பாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி வேட்டைத்தடுபபு காவலர் திரு.சிவ தணிகைவேலன் மற்றும் நான் ஆகியோர் குழுவினராக இணைந்து தெற்குமலை மேற்கு பீட் மற்றும் தெற்கு மலை கிழக்கு பீட் பகுதிகளில் இரவு ரோந்து மேற்கொள்ளும்படி எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்போி ல் நாங்கள் இரவு 11 மணியளவில் தெற்குமலை மேற்கு பீட் பகுதியில் இரவு ரோந்து பணியை ஆரம்பித்தோம். அப்போது தெற்கு மலை மேற்குபீட் சூட்டு பொற்றை சராக பகுதிகளில் இரவு ரோந்து பணியில் இருக்கும்போது இரவு 12.10 மணியளவில் வனப்பகுதிக்குள் வெடிச்சத்தம் கேட்டது. எனவே உடனடியாக இதுகுறித்து வனவர் அவர்களுக்கு செல்போன் வழியாக தகவல் தெரிவிக்கப்பட்டு 12.30 மணியளவில் வனவர் எங்களுடன் இணைந்தார். மேலும் அப்பகுதிகளில் மேலும் கவனமாக ரோந்து பணி மேற்கொள்ளும்போது இரவு 12.50 மணி அளவில் மேலும் வனப்பகுதிக்குள் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. எனவே நாங்கள் வனப்பகுதிக்குள் ஆட்கள் யாரேனும் இருக்கலாம் என சந்தேகித்து வனப்பகுதிக்குள் இருந்து வெளிவரும் பாதையை ஒட்டி புதர்க்குள் மறைந்திருந்தோம். அதிகாலை 3.30 மணி அளவில் அவ்வழியாக ஒரு இருசக்கர வாகனம் வருவதை தெரிந்து அவர்களை நிறுத்தி விசாரித்தபோது அதில் இருவர் இருந்தனர். மேலும் விசாரிக்கையில் அவர் தோப்பூரை சார்ந்த ஏசுவடியான் என்பதும்

அவர் வனப்பகுதியை ஒட்டியுள்ள பூங்காவனம் தோட்டத்தில் காவலாளியாக பணியாற்றி வருவதும் தெரிய வந்தது. மேலும் ஒருவர் தோப்பூரை சார்ந்த டைசன் மாணிக்கம் என்பதும் முன்னர் சொன்ன ஏசுவடியான் இவருக்கு மாமா முறை என்பதும் தெரியவந்தது. மேலும் அவர்களிடம் விசாரணை செய்தபோது அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக கூறியதால் அவர்கள் பேரில் சந்தேகம் அடைந்து அவர்களை வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து சென்று விசாரிக்கலாம் என தயாரானபோது டைசன் மாணிக்கம் என்பவன் செல்போனிற்கு அழைப்பு வந்தது. அதை நாங்கள் எடுத்து பேசியபோது மறுமுனையில் ஒருவர் அங்கு யாரேனும் உள்ளரார்களா நாங்கள் வரலாமா என்று கேட்டார். அதற்கு நாங்கள் டைசன் மாணிக்கம் போல பேசி ஆள்கள் யாரும் இல்லை உடனடியாக வரும்படி கூறினோம். பின்னர் மேற்படி இருவரையும் வனவர் வசம் ஒப்படைத்துவிட்டு நாங்கள் மீண்டும் பாதையை ஒட்டியுள்ள ஆர்பி ஆர் பாலம் அருகே பதுங்கியிருந்தோம். அதிகாலை 4.30 மணி அளவில் அதே பாதையில் மேலும் ஒரு இருச்சக்கர வாகனம் வருவதை தெரிந்து அதை நிறுத்த முற்பட்டபோது அவர்கள் நிறுத்தாமல் எங்கள் மீது இடித்து மோதி அதிலிருந்த ஒரு நபர் தப்பிவிட்டார். மேலும் ஒருவர் அருகிலிருந்த தோவாளை கால்வாயில் குதித்து தப்பிக்க முற்பட்டார். எங்கள் குழுவில் உள்ள வனக்காப்பாளர் கிருஷ்ணமூர்த்தி தோவாளை கால்வாயில் இறங்கி தப்பிக்க முற்பட்டவரை பிடித்தார். பின்னர் அவரை விசாரித்தபோது அவர் காட்டுப்புதூரை சேர்ந்த ஸ்டீபன் ராஜ் என்பதும் தப்பித்து ஓடியவர் இறைச்சக்குளம் பகுதியை சார்ந்த அஜித் என்பதும் அஜித் என்பவரது

போனில் இருந்து தான் டைசன் மாணிக்கத்திற்கு அழைபபு வந்ததும் தெரியவந்தது. அவர்கள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது அதில் வாய் வெடித்த நிலையில் உயிரிழந்த முழு காட்டுப்பன்றியும் தோலுரிக்கப்பட்ட நிலையில் ஒரு காட்டுப்பன்றியும் செப்பு பகுதியும் விலா பகுதியும் இருப்பது தெரிந்து அதுகுறித்து அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் அனைவரும் சேர்ந்துதான் குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொண்டார்கள். இது குறித்து உடனடியாக வனவர் மூலம் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின் மீதமுள்ள காட்டுப்பன்றியின் பாகம் எங்கே என்று விசாரித்தபோது பூங்காவனம் தோட்டத்தில் ஏசுவடியான் என்பவருக்கு கொடுக்கப்பட்ட அறையில் இருப்பதாக கூறினார். அந்த அறையை சோதனை செய்தபோது அதில் காட்டுப்பன்றியை வெட்ட பயன்படுத்திய கத்தி, அரிவாள், மற்றும் பிளேடு போன்றவையும் ஒரு வேட்டை நாயும் மேலும் காட்டுபபன்றியின் மீத உடல் பாகங்களும் இருப்பது தெரியவந்தது. மேலும் அவர்களிடம் எங்கே வேட்டையாடினீ ர்கள் என்று விசாரித்தபோது அவர்கள் சுட்டிக்காட்டிய இடம் கன்னியாகுமரி வனஉயிரின சரணாலயம், பூதப்பாண்டி வனச்சரகம் தெற்குமலை மேற்கு பீட், சூட்டுபொற்றை சராக பகுதியில் இருப்பது தெரியவந்தது. எனவே அவர்கள் வனஉயிரின சரணாலய பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து நாட்டு வெடி வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடியது தெரியவந்தது. பின் இது குறித்த எச் நமுனா கிருஷ்ணமூர்த்தி வனக்காப்பாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டது. இதுவரை நடந்த சம்பவங்களை வரிசையாக குறிப்புகள் எடுத்துக்கொண்டு

போதிய வெளிச்சமில்லாததாலும் மேலும் எங்கள் பாதுகாப்பு கருதியும் கைப்பற்றிய பொருட்களுடன் எதிரிகள் மூவரும் காலை 5.45 மணி அளவில் வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலகர் முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். பின் இதற்கான ஸ்தல மகசர் திரு.கிருஷ்ணமூர்த்தி வனக்காப்பாளரால் தயார் செய்யப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்தேன். எதிரிகள் மூவரும் வனச்சரக அலுவலரால் விசாரிக்கப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் ஏசுவடியான் என்பவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வனச்சரகர் முன் என்னால் பெறப்பட்டது. மற்ற இருவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பின் இதுகுறித்து வனச்சரக அலுவலகர் அவர்கள் என்னை விசாரித்தார்கள். பின்பு எதிரிகள் மூவரையும் கைது செய்து நீதிமன்றத்தின் முன்பு ஆஜர்படுத்தினோம். என்னிடம் காண்பிக்கப்படும் 4 வது எதிரி ஏசுவடியான் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடயது தான். (**4 வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)